## வீசாக்கள்

தங்களின் உத்தேசிக்கப்பட்ட பயணம் மற்றும் ஏனைய சம்பவங்களின் நோக்கமானது ஐக்கிய அமெரிக்காவின் குடியேற்றச் சட்டத்தின் கீழ் எவ்வகையான வீசா தங்களுக்குத் தேவைப்படுகின்றது என்பதைத் தீர்மானிக்கும். நீங்கள் ஒரு வீசா விண்ணப்பதாரியாக இருப்பின், எதற்காக விண்ணப்பிக்கின்றீர்கள் என்ற வீசா தொடர்பான வகைப்பாட்டினைப் பெறுவதற்குரிய அனைத்துத் தேவைகளையும் சந்திக்கும் வகையில் நீங்கள் உங்களை நிலைநிறுத்துவது அவசியமானது.

ஐக்கிய அமெரிக்காவிற்கான உங்கள் பயண நோக்கத்திற்குப் பொருத்தமான வீசா வகையினைத் தீர்மானிப்பதற்கு usvisas.state.gov என்ற எமது இணையத்தளத்தில் வீசா வகைகளின் விபரக் கொத்தினைப் (Directory of Visa Categories) நீங்கள் பார்வையிடலாம்.

## வீசா என்றால் என்ன?

ஐக்கிய அமெரிக்காவிற்குள் நுழையும் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் பொதுவாக முதலில் ஓர் ஐக்கிய அமெரிக்காவிற்கான வீசாவினைப் குடியுரிமைப் பயணியின் நாட்டில் வழங்கப்படுகின்ற பிரயாண ஆவணம், பயணம் செய்பவரின் கடவுச்சீட்டு என்பவற்றில் உள்ளவாறு பெற்றுக் கொள்ளவேண்டும்.

குறிப்பிட்ட சர்வதேசப் பயணிகள் இலவச வீசா பயணத்திற்கான தேவைகளை எதிர்கொள்வார்களாயின், வீசா ஒன்று இன்றி ஐக்கிய அமெரிக்காவிற்குப் பயணம் செய்வதற்குத் தகுதி உடையவர்கள் ஆவர்.

(குறிப்பு: ஐக்கிய அமெரிக்கப் பிரஜை ஒருவருக்குப் பயணத்திற்கான வீசா அவசியமில்லை. ஆயினும், அவர் வெளிநாட்டிற்குப் பயணிப்பதற்குத் திட்டமிடும்போது அவர் விஜயம் செய்ய விரும்பும் நாட்டின் தூதரகத்தின் மூலம் வழங்கப்படும் வீசா தேவைப்படலாம்).

## எமது தொடர்பு:

எமது வாடிக்கையாளர் சேவைப் பிரதிநிதி ஒருவரைத் தொடர்பு கொள்வதற்கு தயவுசெய்து GSS என்பதிலுள்ள எமது தொடர்பு (GSS Contact Us) என்ற பகுதியில் பூரண தகவல்களைப் பெறுவதற்காக விஜயம் செய்யவும் அல்லது பின்வரும் தகவல் தொடர்பினை உபயோகிக்கவும்.

**தொலைபேசிஅழைப்பு நிலையம்:**

இலங்கையிலிருந்து அழைப்பினை ஏற்படுத்துவதற்கு 94-11-770-3703,

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து அழைப்பினை ஏற்படுத்துவதற்கு 1-703-988-3469

மின்னஞ்சல் முகவரி: support-srilanka@ustraveldocs.com

[GSS எமதுதொடர்பு இணைப்பு to http://www.ustraveldocs.com/lk/lk-main-contactus.asp]

**வாடிக்கையாளர் சேவை விபரம்:**

இராஜாங்கத் திணைக்களமானது வீசா செயற்பாடுகளை மிகவும் கடுமையான முறையிலும் ஆனால் ஐக்கிய அமெரிக்காவின் சிறந்த பாதுகாப்பிற்காக நியாயமான முறையிலும் முகாமை செய்கின்றது. எப்போதும் அறியப்படும் ஐக்கிய அமெரிக்காவிற்கான அத்தியாவசிய வெளிப்படைத் தன்மைக்கு நாம் கடமைப்படுகின்றோம். ஐக்கிய அமெரிக்காவிற்கான தங்களின் பயணத்தை நாம் வரவேற்று உற்சாகப்படுத்துகின்றோம்.

**வீசா விண்ணப்பதாரியாகிய உங்களுக்கு நாம் உறுதி கூறுவது யாதெனில்,**

- எம்மால் உங்களுக்கு வீசா வழங்க முடியாதவிடத்தும் கூட நாம் உங்களுடன் கௌரவத்துடனும் மரியாதையுடனும் நடந்து கொள்வோம்.
- நாம் தனித்தனியாக அல்லது உங்களுடைய தனிப்பட்ட விடயங்கள் தொடர்பாக கண்ணியமாக நடந்து கொள்வோம்.
- உங்களுக்கு வீசாவிற்கான நேர்முகத்தேர்வு புதியதாகவும் அல்லது ஒரு பயமுறுத்தும் அனுபவமாகவும் இருக்கலாம் என்பதனால் நீங்கள் ஒருவிதமான கலவர நிலையில் இருப்பீர்கள் என்பது எமக்கு ஞாபகத்தில் இருக்கும்.
- நாம் நேர்முகத்தேர்விற்காக உங்களுடைய பயணத் திட்டத்தினதும் நோக்கத்தினதும் சாத்தியமாயின், முழுமையான படத்தைப் பெறுவதற்குக் கிடைக்கப் பெறும் ஒரு வரையறுக்கப்பட்ட நேரத்தை உபயோகிப்போம்.
- வாணிபம், கல்வி மற்றும் ஏனைய முக்கியமான கடமைகளுக்கு உரிய நேரத்தில் பயண அனுமதிக்கான நியமனத்தைப் பெறுவதற்கு அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் நியாயமான முறையில் உதவி செய்வதற்கு நாம் எமது கிடைக்கப் பெறும் வளங்களை உபயோகிப்போம்.
- நாம் ஒவ்வொரு தூதரகத்திலும், ஆலோசனை இணையத்தளத்திலும் வீசாவிற்கான தேவைகள் மற்றும் வீசா விண்ணப்பத்திற்கான நடைமுறைச் செயற்பாடுகள் பற்றிய விபரமானதும் சரியானதுமான தகவல்களை அனுப்புவோம்.
- நாம் ஒவ்வொரு தூதரகத்திலும் ஆலோசனை இணையத்தளமான http://travel.state.gov இலும் குடியேற்றம் வீசா அல்லாத நியமனங்களுக்கான காத்திருப்பு நேரத்தைப் பற்றிய தகவல்களை வழங்குவோம்.
- நாம் உங்களுக்கு எந்தவொரு வீசா நிராகரிப்பிற்கான காரணத்தைப் பற்றியும் விளக்கம் அளிப்போம்.

**உங்களுக்காக இன்னும் சில,**

- மாணவர்களே! நீங்கள் ஒரு நியமனத்தைப் பெறுவதற்கும், தகுதியாயின் உரிய நேரத்தில் வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான வீசாவை நிச்சயப்படுத்துவதற்குரிய ஒவ்வொரு முயற்சியையும் நாம் உருவாக்குவோம்.
- மருத்துவ மற்றும் மனிதாபிமான அவசரப் பயணிகளே! வாழ்வை அச்சுறுத்தும் அவசர நிலைமைகளைச் சமாளிப்பதற்கான செயற்பாடுகளை நாம் துரிதப்படுத்துவோம்.
- வர்த்தகப் பயணிகளே! குறிப்பிட்ட அமெரிக்க வியாபார நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களைத் துரிதப்படுத்துவதற்கும், வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான பயணங்களை எளிமைப்படுத்துவதற்கும் பொருத்தமான நுட்பங்களை நாம் நிறுவுவோம்.

**அதேவேளை, நாம் வீசா விண்ணப்பதாரியான உங்களிடம் எதிர்பார்ப்பது யாதெனில்,**

- சாத்தியமாயின், முன்னமே உங்களுடைய பயணம் மற்றும் வீசா விண்ணப்பப் படிவத்தினைத் திட்டமிடுக.
- உங்களுடைய விண்ணப்பப் படிவத்தினைச் சரியாகவும் பூரணமாகவும் பூர்த்தி செய்க.
- உங்களுடைய நோக்கத்தினையும் திட்டத்தினையும் பற்றித் தேவை ஏற்படும்போது விளக்குவதற்குத் தயாராகுக.
- நேர்முகத்தேர்வில் உங்களுடைய நோக்கத்தினைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விபரிக்கக் கூடிய நிலையில் நீங்கள் உங்களைத் தயார்ப்படுத்துக.